# ஜெப விண்ணப்பங்கள்




1. சபை வாழ்வில் புதிய ஆண்டை காண செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். இச்சபை உருவாக காரணமாயிருந்த GBM ஸ்தாபனத்தையும், தேவன் பயன்படுத்திய பரிசுத்தவான்களை நினைவு கூறுவோம்.
2. இப்புதிய ஊழிய ஆண்டில் தேவன் நம்மை உயிர்ப்பிக்கவும், சபையாக ஊழியங்களை எழுந்து கட்டவும், எதிர்கால சந்ததிக்கு முன் மாதிரியாக விளங்க நம்மை அர்ப்பணிப்போம்.
3. நமது சபையில் ஆவிக்குரிய தன்மை மேலோங்கவும் தேவன் மட்டும் மகிமை படும்படியான காரியங்கள் செயல்படவும், தேவ சித்தத்திற்கு விரோதமான சிந்தனை அகற்றப்படவும்
4. ஆண்டு விழா ஆராதனையின் செய்தியாளர்களுக்காகவும், சபையார் விசுவாசத்திலும் சத்தியத்திலும் பெலப்படவும், தேவ நாமம் மட்டும் மகிமைப்படுத்தப்பட
5. கீழ்முதலம்பேடு ஆலய கட்டுமான பணியின் தேவைகள் முழுமையாக சந்திக்கப்பட
6. கிளை சபைகளில் வளர்ச்சிக்கு தடையாயிருக்கின்ற மனித ஞானம், சுயநலமான ஆதாயம் போன்றவைகள் அகற்றப்பட
7. பெலவீனமாக உள்ள முதிய விசுவாசிகளுக்காகவும் ஆதரவும், உதவிகளும் கிடைக்க
8. திரு. ஆல்பர்ட் அவர்களின் மறைவினால் வாடும் குடும்பத்தாருக்கு தேவன் ஆறுதலையும், சமாதானத்தை அருள, குடும்பத்தாரை தேவன் சந்திக்கவும்
9. விசுவாசத்தை விட்டு பின்வாங்கிப்போன மக்கள் சந்திக்கப்பட
10. ஜெபக்குழுக்கள் மூலம் சந்திக்கப்படும் மக்கள் விசுவாசத்தில் வளரவும் சத்தியத்தினால் விடுதலை பெறவும்
11. ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாகும் இளம் விசுவாசிகள் சத்தியத்தை அறிகிற அறிவில் வளரவும்.
12. சபையின் வழக்குகளில் கர்த்தர் ஏற்ற பரிகாரத்தை தர.
13. நம் நாட்டிற்குத் தேவையான மழையை கர்த்தர் அருள
15. சபையில் பெலவீனமாய் இருக்கும் அனைத்து ஐக்கியங்களை தேவன் பெலப்படுத்தவும் சத்தியத்தினால் சீர்ப்படுத்தவும், உயிர்ப்பிக்கவும், புதிய நபர்கள் ஐக்கியங்களில் இணைக்கப்படவும்
16. திருமதி. ஜெமிமா சுரேஷ்க்கு கர்த்தர் கொடுத்த பெண் குழந்தைக்காக அவரை ஸ்தோத்தரிப்போம்.
17. செல்வி வைலட் பெற்று வருகின்ற சிகிச்சையின் மூலம் பூரண சுகம் பெற.
18. திருமதி பிரேமலா செல்வதுரைக்கு நடைபெற்ற இரண சிகிச்சையிலிருந்து பூரண சுகம் அருள


# தமிழ் பாப்திஸ்து சபை, கீழ்ப்பாக்கம்

சென்னை – 600 010.

மலர் 19 | ஜெப செய்தி மடல் | செப்டம்பர் 2014 | இதழ் 9

## போதகரின் பகுதி

**உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து ...அவரிடத்தில் அன்பு கூர்ந்து... உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து... கற்பனைகளைக் கைக்கொள். உபா. 10 : 12, 13**

கிறிஸ்தவ வாழ்வில் முழு கவனம் செலுத்தாமல் நமது மனமும் சித்தமும் உணர்ச்சியும் முழுமையாக ஒருங்கிணைந்து செயல்படவில்லையென்றால் பெலமுள்ள கிறிஸ்துவ வாழ்க்கை இருக்காது. பரிசுத்தாவியானவர் உணர்த்தும் சத்தியங்களுக்கு தேவ சித்தத்தினால் கீழ்படிந்து மனம் மற்றும் உணர்ச்சியினால் நிறைவேற்றுவதே கீழ்படிதல். ஆவிக்குரிய வாழ்வில் சித்தத்தை ஈடுபடுத்துவதே முதல் காரியம். ஆவிக்குரிய விஷயத்தில் அனலுமின்றி குளிருமின்றி இருப்பது வெறுக்கத்தக்கது. அது பின்வாங்கிப்போன நிலையைக் காட்டுவது. இதனைத்தான் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக் கிறார்கள். (2 தீமோ 3:5) என்று பவுல் கூறுகிறார். மேலும் பரிசுத்தாவியின் நிறைவு நமக்குள் பரிசுத்த உணர்ச்சிகளை உண்டு பண்ண வேண்டும். மேலும் ஆவியானவர் சத்தியத்தை உணர்த்துவதினால் நம் இருதயம் கொழுந்துவிட்டு எரிகிற உணர்ச்சியின் அனுபவத்தைப் பெறவேண்டும்.

விசுவாசிகளின் சித்தம் பெலவீனமாக இருக்கும் போது அவர்களில் பாவ உணர்ச்சிகள் பெலமுள்ளதாக இருக்கும். பெரும்பாலான நம் செயல்களுக்கு நம் உணர்ச்சிகளே காரணமாய் இருக்கிறது. அதாவது அன்பு, வெறுப்பு, விருப்பம், நம்பிக்கை, பயம் ஆகிய உணர்ச்சிகளின் தூண்டுதலால் எந்த முடிவையும் எடுக்கிறோம். சுவிசேஷத்தைக் கேட்டோர் உள்ளத்தில் அது அவர்கள் உணர்ச்சிகளைத் தொடவில்லையென்றால் அவர்கள் கீழ்படிய முடியாது. கேட்ட சத்தியங்கள் அவர்களை உணர்த்தவில்லையென்றால் அவர்கள் மனம்திரும்ப முடியாது. பரிசுத்தாவியின் உணர்த்துதல் ஒரு மனிதனின் சிந்தையிலும் மனதிலும் உணர்ச்சியிலும் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். சிறைச்சாலைத் தலைவன் பவுலை நோக்கி ஆண்டவரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று சத்தமிட்டுக் கூப்பிட்டான். அப். 10 : 29.

**பயம் :** தெய்வ பயத்தை மெய்பக்தியின் முக்கியப்பகுதியாக வேதம் கூறுகிறது. விசுவாசிகளுக்கு வேதத்தில் மற்றொரு பெயர் தேவனுக்குப் பயந்தவர்கள். 'என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்'. ஏசாயா 66 : 2.

**இப்புதிய ஊழிய ஆண்டில் தெய்வ பயத்தோடு வாழ நம்மை அர்ப்பணிப்போம்.!**

# டேவிட் லிவிங்ஸ்டன் David Livingston (1813 1873)

ஆப்பிரிக்கா நாட்டின் அடர்ந்த காடுகளுக்குள் நடந்து சென்று அன்பற்ற காட்டு இனமக்களிடம் தனது தெய்வீக அன்பை காட்டிய லிவிங்ஸ்டன் அடைந்த துன்பங்கள் ஏராளம். சரீர பெலவீனத்தால் அடிக்கடி சோர்வுற்றார். முற்றிலுமாய் தன் பெலன் ஒடுங்கிய காலங்களில், சில உண்மையுள்ள ஆப்பிரிக்க நண்பர்கள் மூங்கில் கம்புகளால் செய்யப்பட்ட தொட்டில் ஒன்றில் அவரை தூக்கி சென்றனர். ஒரு சிறு குடிசையில் அவரை வைத்து பராமரித்தனர். 1873ம் ஆண்டு மே மாதத்தில் ஒருநாள் காலை அவரது நண்பர்கள் குடிசைக்குள் சென்ற போது படுக்கையருகே முழங்காலில் நின்ற வண்ணமாக ஜெபித்துக் கொண்டிருந்ததை கண்டனர். பல மணி நேரங்கள் சென்றப் பின்னர் அதே நிலையில் அவர் இருந்ததைக் கண்டு அவரது நண்பர்கள் அவர் பக்கம் சென்றனர். அப்போது தான் லிவிங்ஸ்டன் ஜெப நிலையிலேயே மரித்துக் கிடந்தார் என்பதை உணர்ந்துக் கொண்டனர்.

ஆப்பிரிக்க நாட்டிற்காக தன் இதயத்தையே கொடுத்தார் லிவிங்ஸ்டன் என்று சொன்னால் அது மிகையாகாது. எப்படியெனில், அவர் மீது அன்பும் மரியாதையும் வைத்திருந்த ஆப்பிரிக்க மக்கள் அவரது 'இருதயத்தை' எடுத்து, தங்கள் நாட்டின் மத்திய பகுதியில் அவரது நினைவாக புதைத்தனர். அவரது சரீரம் மட்டும் கெட்டு போகாத வண்ணம் பதம் செய்யப்பட்டு இங்கிலாந்துக்கு எடுத்து செல்லப்பட்டது. மெலிந்து போன உருவத்தை கொண்டு அநேகரால் அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. சிங்கத்தால் பீறுண்ட அவர் தோள்பட்டை தழும்பை வைத்து தான் அவரை அடையாளம் கண்டுக் கொள்ள முடிந்தது. இங்கிலாந்தின் புகழ் பெற்ற மனிதர்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்த 'வெஸ்ட்மினிஸ்டர் அபே' (Westminister Abbey) என்னும் இடத்தில் தேசிய மரியாதையுடன் ஆயிரக்கணக்கான மக்கள் காண அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

'லிவிங்ஸ்டனும் நானும் ஒரே கிராமத்தில் பிறந்து வளர்ந்தோம். ஓய்வுநாள் பாடசாலையில் ஒன்றாக படித்தோம். பஞ்சாலையில் ஒன்றாக வேலை செய்தோம். அவரோ நித்ய கடவுளின் வழியில் நடந்து உலகில் ஒப்பற்ற பணியை செய்து முடித்தார். நானோ என் சொந்த வழியில் நடந்து அநேகரால் விரும்பப்படாதவனாகவும் அவமரியாதைக்குரியவனாய் வாழ்ந்து விட்டேன். உலக முழுவதும் இன்று அவரை புகழ்ந்து மரியாதை செலுத்துகிறது. எனக்கோ குடிகாரனுடைய பிரேத குழிதான் காத்திருக்கிறது' என்று அடக்க ஆராதனையில் வந்த ஒருவர் சொல்லி அழுதார்.

'என்னை கனம்பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்.' (1 சாமு 2::30) என்பது வேத வாக்கு. லிவிங்ஸ்டன் தன் வாழ்நாளில் கிறிஸ்துவை கனப்படுத்தி உயர்த்தி மகிமைப்படுத்தினார். ஆகவே இறுதியில் அவர் கனப்படுத்தப்பட்டார். அவர் பாதையில் சென்ற அநேக அருட்பணியாளர்கள் இன்றும் ஆப்பிரிக்கா கண்டத்தில் சுவிசேஷ ஒளியை பிரகாசிக்க செய்து கொண்டிருக்கிறனர்.

லிவிங்ஸ்டன் Living stone என்பது தான் அவர் பெயர். உண்மையாகவே உயிருள்ள கல்லாக மரித்தும் இன்னும் பேசிக்கொண்டிருக்கிறார்.

முடிந்தது

## இம்மாத நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 07.09.2014 | ஓய்வு நாள் பள்ளி ஆசிரியர் கூடுகை |
| 13.09.2014 | சேர்ப்பின் பண்டிகை ஆராதனை. மாலை 4.00 மணிக்கு |
| 14.09.2014 | சபையின் 114 ஆம் ஆண்டு விழா / மாலை கீத ஆராதனை |
| 20, 21 | தேதிகளில் எஸ்கோல் சபையின் 25ஆம் ஆண்டுவிழா |
| 21.09.2014 | குடும்ப கூடுகை காலை ஆராதனைக்கு பிறகு |
| 26.09.2014 | இரவு ஜெபம் (மாலை 7.00 முதல் 10.00 மணி வரை) |
| 28.09.2014 | தண்டலம் சபையின் ஞானஸ்நான ஆராதனை |
| 01.10.2014 | ஸ்தோத்திர ஜெபம் காலை 5.00 மணிக்கு |
| | அக்டோபர் 2 முதல் 4 வரை குடும்ப முகாம் எண்ணூர் |
| 02.10.2014 | BYF தாலந்துப் போட்டிகள் |

## ஊழிய செய்திகள்

- **15.8.14** அன்று BYF சிறப்பு ஒடுக்க கூட்டம் மிக சிறப்பாக நடைபெற்றது. இதில் 280 வாலிபர்கள் நம் சபை மற்றும் கிளை சபைகளிலிருந்து பங்குக் கொண்டனர்.
- **23.8.14** அன்று கிளை சபைகளின் ஊழிய அறிக்கை சமர்ப்பிப்பு கூட்டம் நடைபெற்றது இதில் கிளை சபைகளின் ஊழியர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்துக் கொண்டனர்.
- **29.8.14** அன்று ஓய்வு நாள் பள்ளி பிள்ளைகளுக்கான தாலந்துப் போட்டிகள் நடைபெற்றன. வேத வினா விடை போட்டியில் சாமிதாஸ்புரம் அணியும் சிறுவர்களுக்கான போட்டியில் லாக் தெரு மற்றும் நமது சபை அணியும் வெற்றி பெற்று சுழற் கோப்பையை கைப்பற்றின.
- **30.8.14** அன்று சபையின் மகா சபை கூட்டம் நடைபெற்றது. பல்வேறு ஐக்கியங்களின் ஊழிய அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டன. சபையின் எதிர்கால நலன்களைக்குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

## சிந்தனைக்கு

திருமறையின் ஒளியில் தங்களை தாங்களே பரிசோதித்து பார்ப்பது நமது திருச்சபையின் வாழ்வின் உன்னத நோக்கமும் கடமையுமாயிருக்கிறது. வேதத்தின் கட்டளைக்கு இணங்கி கீழ்படிந்து வாழவும் கடவுளுக்கு முன்பாக அதிக ஜெபத்தோடும் தாழ்மையோடும் அன்புடனும் தியாகத்துடனும் அர்ப்பணிப்புடனும் திருசபையின் பக்திவிருத்திக்காகவும் தேவனுடைய நாமம் மட்டும் மகிமை படும்படியான நமது கடமையை நிறைவேற்ற வேண்டும். இதற்கு ஆதார மாக திருமறையின் போதனைகளை மிக ஆழமாகவும் ஆராய்ந்து அறிய வேண்டும். தீவிரமான ஆர்வமும் பயபக்தியான தீர்மானமும் இரக்கத்தாலும் பொறுமையாலும் சபையில் உண்மையும் மனப்பூர்வ முமான சீர்திருத்ததை ஆண்டவர் கனம் பண்ணுவார். ஆண்டவருக்கு கீழ்படியாமல் அவருடைய தயவை தேட நமக்கு உரிமையில்லை கடவுளின் வார்த்தையின்படி சபை வாழ்கையினை சீர்படுதுதல் உடன் பரிசுத்த ஆவியின் பெருமழை தேவைப்படுகிறது.